# <u>பயிற்சிகள்.</u>

வணக்கம் மாணவர்களே,

பாடப் புத்தகத்தில் பக்கம் **201** இல் காணப்படும் உரையின் அமைப்பை அறிதல். அதோடு, பக்கம் **203** இல் காணப்படும் குறைநீக்கல் பயிற்சியைச் செய்தல். உங்கள் விடைகளைத் தொலைவரியில் அனுப்பவும். இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) ஞாயிறு இரவு **7** மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

# பாடம் 3 பொருளாதார மேன்மை

## உரை அமைப்பு அறிந்து எழுதுக.

பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே

அவைத்தலைவர் அவர்களுக்கு நன்றி. இச்சிறுதொழில் கண்காட்சிக்குச் சிறப்பு வருகைப் புரிந்திருக்கும் திருமதி உமா அவர்களே, ஏற்பாட்டுக் குழுவினர்களே, பார்வையாளர்களே உங்கள் அனைவருக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் என்னை இந்தச் சிறுதொழில் கண்காட்சிக்கு அழைத்த ஏற்பாட்டுக் குழுத் தலைவருக்கும் அவர்தம் செயலவை உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன். ஏற்பாட்டுக் குழுவினர் என்னிடம் "எவ்வாறு சிறுதொழில் செய்வதால் குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம்" என்பதைப் பற்றி ஓர் உரை நிகழ்த்த கேட்டுக்கொண்டனர். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி சிறுதொழிலில் பொருளாதார மேம்பாடு பற்றிச் சற்று அலசி ஆராய்வோம்.

வருகையாளர்களே,
என் பார்வையில் சிறுதொழில் என்பது இன்றைய காலக்கட்டத்தில் ஒவ்வொரு தனிமனிதன், குடும்பம் ஆகியோருக்கு அடிப்படையான ஒன்றாகும். நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக உலக வாழ்க்கை மிகவும் மேம்பாடடைந்து காணப்படுகின்றது. இதனால், நாம் சம்பாதிக்கும் பணமும் போதவில்லை. சிறுதொழில் செய்வதன்வழி, பணச் சிக்கலைக் களைய முடியும். சிறுதொழில் என்பது ஒரு சிறிய கூடாரத்தில் அல்லது வீடு வீடாகச் சென்று மக்களுக்குத் தேவையான சிறிய வகை பொருள்களை விநியோகம் செய்வதே ஆகும். உதாரணத்திற்கு, கைவினைப் பொருள்கள், உடைகள், காலையுணவு போன்றவற்றை விற்பனை செய்வதும் சிறுதொழிலில் அடங்கும்.

சபையோர்களே,
இன்றைய சூழலில் நாம் நம் பிள்ளைகளுக்குச் சிறுதொழில் வியாபாரம் செய்வதால் விளையும் நன்மைகளைச் சொல்லிக் கொடுத்தே வளர்க்க வேண்டும். சிறுதொழில் செய்வதனால் நாம் நம் குடும்பத்தில் நிகழும் பணத் தட்டுப்பாட்டைக் களைய முடியும். மேலும், சிறுதொழில் நம்மிடையே உள்ள தன்னம்பிக்கையை வளர்க்கும். அதுமட்டுமல்லாமல், சிறுதொழிலின்வழி நாம் நமக்குத் தெரியாதவர்களையும் அறிந்து கொள்ளலாம். இதனால், உலகத்தில் வாழும் மக்களின் குணாதிசயங்களையும் அறிந்து செயல்படும் பக்குவத்தைப் பெற முடியும். தொடர்ந்து, சிறுதொழில் செய்வதினால் நம் சேமிப்பை அதிகரிக்கலாம். சிறுதொழிலின்வழி வரும் ஆதாயத்தை நாம் வங்கியில் சேமித்து வைக்கலாம். அந்தச் சேமிப்புப் பணத்தைப் பிள்ளைகளின் படிப்பிற்காகவும் அல்லது அவர்களின் எதிர்காலத்திற்காகவும் பயன்படுத்தலாம்.

3.4.27 220 சொற்களில் தலைப்பையொட்டி உரை எழுதுவர்.

நண்பர்களே,

சிறுதொழிலின்வழி நமக்கு அதிகம் நன்மைகளே விளைகின்றன. ஒரு குடும்பத்தின் பொருளாதார வளர்ச்சி அக்குடும்ப உறுப்பினர்களின் முயற்சியில்தான் அமைந்துள்ளது. சீரான பண வரவு ஒரு குடும்பத்தில் பொருளாதாரத்தை மேம்பாடடையவே செய்யும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்வளவு நேரம் அமைதியாக எனது உரையைச் செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**இடுபணி 1**

**மேற்கண்ட உரையிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளம் கண்டு எழுதுக.**

**இடுபணி 2**

**உன் பள்ளி சபைக்கூடலில் 'பொருளாதார மேம்பாட்டிற்குச் சேவைத்துறையின் பங்கு' எனும் தலைப்பில் ஓர் உரையாற்ற உள்ளாய். அவ்வுரைக்குத் தேவையான கருத்துகளைக் குழுவில் கலந்துரையாடி மர வரைபடத்தில் வரைந்திடுக.**

**இடுபணி 3**

**மாட்டுப்பொங்கல் திருநாளையொட்டி உன் வசிப்பிடத்தில் நடைபெறும் தமிழர் திருநாள் நிகழ்ச்சியில் 'கால்நடை வளர்ப்பில் இந்தியர்களும் தொழில்நுட்பமும்' எனும் தலைப்பில் ஓர் உரையாற்ற உள்ளாய். அவ்வுரையை 220 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

**வளப்படுத்துதல்**

**கீழ்க்காணும் சட்டகத்தைப் பூர்த்தி செய்திடுக. அச்சட்டகத்தைத் துணையாகக் கொண்டு 'பெண்களின் பொருளாதார வளர்ச்சியில் சிறுதொழிலின் பங்கு' எனும் தலைப்பில் ஓர் உரை எழுதுக.**

## பெண்களின் பொருளாதார வளர்ச்சியில் சிறுதொழிலின் பங்கு

**முன்னுரை**

மதிப்பிற்குரிய நிகழ்ச்சி நடத்துநர் அவர்களே, தனித்து வாழும் தாய்மார்கள் கழகத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களே மற்றும் இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள பெண்மணிகளே, உங்கள் அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் இந்நிகழ்ச்சியில் உரையாற்ற வாய்ப்புக் கொடுத்தமைக்காக நிகழ்ச்சியின் பொறுப்பாளர்களுக்கு நன்றியைக் கூறி என் உரையைத் தொடங்குகிறேன்.

**கருத்து 1: பெண்கள் சுயகாலில் நிற்றல்.**

பெண்மணிகளே,
இந்தக் காலக்கட்டத்தில் பெண்கள் நாட்டின் கண்கள் மட்டுமல்ல. பெண்கள், குடும்பம், சமுதாயம் என அனைத்து வட்டாரங்களிலும் மதிப்புக்குரியவர்களாகவும் போற்றப்படுபவர்களாகவும் திகழ்கின்றனர். பொதுவாக இன்றைய பெண்கள் சுயகாலில் நிற்பவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் தனக்கான சுய மரியாதையை வேலைக்குச் செல்வதன் மூலம் பெறுகின்றனர். குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்றனர்.

**கருத்து 2:**

**கருத்து 3: சிறுதொழில் வருமானத்தைப் பெருக்குகின்றது.**

**கருத்து 4:**

**கருத்து 5:**

**கருத்து 6:**

**முடிவுரை**

சபையோர்களே,
இறுதியாக, சுயதொழில் செய்வதனால் நாம் நம் பொருளாதாரத்தைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல் துணிவாகச் செயல்படவும் கற்றுக்கொள்ள முடியும். ஆகவே, ஒவ்வொருவரும் சுயமாக ஏதாவதொரு தொழிலைக் கற்று அறிவார்ந்த மற்றும் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த சமுதாயமாக உருவாகுவோம்.

நன்றி, வணக்கம்.

**குறைநீக்கல்**

**கீழ்க்காணும் குறிப்புகளின் துணையுடன் தேசிய அளவிலான மாணவர் தொழில் முனைவர் தொடக்க நிகழ்ச்சியில் நீ ஆற்றிய 'பொருளாதார மேம்பாட்டில் மாணவர்களின் பங்கு' எனும் உரையின் அவை வணக்கத்தை எழுதுக.**

அவை வணக்கம் | வாய்ப்புக்கு நன்றி | உரையாற்றுவதில் மகிழ்ச்சி